# 5 கடத்தல் மற்றும் சுரண்டல்

## தகுதியறிதல் நேர்காணலில் சுரண்டலைப் பற்றி பேசுதல்

UK

தகுதியறிதல் நேர்காணல் அல்லது "சிறிய நேர்காணல்" என்பது பொதுவாக நீங்கள் இங்கிலாந்து வந்து சேர்ந்தவுடன் நடத்தப்படும். சில சமயம் நீங்கள் வந்து சேர்ந்த அதே நாளில் நடைபெறலாம். நீங்கள் சோர்வாகவும் மனஅழுத்தத்துடனும் இருக்க வாய்ப்புள்ளது. பெரும்பாலானவர்களுக்கு நேர்காணலுக்கு முன்பு ஒரு வழக்கறிஞரிடம் பேச வாய்ப்பும் கிடைப்பதில்லை. தயாராக இருங்கள். நேர்காணலைச் செய்ய முடியாத அளவுக்கு உங்களுக்கு உடல்நிலை சரியில்லை எனில், ஆரம்பத்தில் இதைச் சொல்லுங்கள்.

சிறிய நேர்காணலின் போது, நீங்கள் "சுரண்டலுக்கு ஆளாகியுள்ளீர்களா" என்று உங்களிடம் கேட்கப்படும். **தகுதியறிதல் நேர்காணலில், நீங்கள் அனுபவித்த எந்தவொரு சுரண்டலை பற்றியும் நேர்காணல் செய்பவரிடம் சொல்வது மிகவும் முக்கியம்.**

### "சுரண்டலுக்கு ஆளாகுதல்" என்றால் என்ன அர்த்தம்?

ஒருவர் தனது தனிப்பட்ட ஆதாயத்திற்காக உங்களை பயன்படுத்திக் கொள்வது சுரண்டல் எனப்படும்.

சுரண்டலின் சில எடுத்துக்காட்டுகள்:

- நீங்கள் ஒருவருடன் உடலுறவு கொள்ள விரும்பாத நிலையில் கட்டாயப்படுத்தப்பட்டீர்கள்
- கூலி ஏதும் இல்லாமலோ அல்லது நியாயமற்ற கூலிக்காகவோ ஒருவருக்கு வேலை செய்ய கட்டாயப்படுத்தப்பட்டீர்கள், உதாரணமாக ஒரு பண்ணையிலோ, ஒரு தொழிற்சாலையிலோ அல்லது ஒரு வேலைக்காரனாகவோ
- போதைப்பொருள் கொண்டு செல்வது போன்ற சட்டவிரோதமான ஒன்றைச் செய்ய நீங்கள் கட்டாயப்படுத்தப்பட்டீர்கள்
- உங்களைச் சுதந்திரமாக செயல்படவோ அல்லது அல்லது நீங்கள் விரும்பினால் வெளியேறவோ அனுமதிக்காத ஒருவருடன் நீங்கள் பயணம் செய்திருக்கிறீர்கள்
- அவர்கள் சொல்வதை நீங்கள் செய்யவில்லை என்றால் உங்களைப் பற்றி புகாரளித்து விடுவதாக ஒருவர் உங்களை அச்சுறுத்தியுள்ளார்
- நீங்கள் அவர்களை விட்டுச்செல்வதை தடுக்கும் முயற்சியில் ஒருவர் உங்கள் பாஸ்போர்ட்டை எடுத்துச் சென்றுவிட்டார்

### உங்கள் சுரண்டலைப் பற்றி நேர்காணல் செய்பவரிடம் கூறுதல்

நீங்கள் சுரண்டலுக்கு ஆளாகியிருக்கிறீர்களா என்று நேர்காணல் செய்பவர் உங்களிடம் கேட்டால், உங்கள் பயணத்தை நீங்கள் தொடங்குவதற்கு முன்போ அல்லது உங்கள் பயணத்தின் போதோ நீங்கள் சுரண்டப்பட்ட நேரங்களைப் பற்றி அவர்களிடம் நீங்கள் சொல்ல வேண்டும். அவர்கள் இதை ஒருமுறை மட்டுமே உங்களிடம் கேட்பார்கள், எனவே **முடிந்தவரை எல்லா தகவல்களையும் வழங்குவது முக்கியம்.**

நீங்கள் வழங்கும் தகவல்கள் பின்வரும் கேள்விகளுக்கு பதிலளித்தால், அது நல்ல பதிலாகும்:

- உங்களுக்கு என்ன நடந்தது, அப்போது நீங்கள் எப்படி உணர்ந்தீர்கள்?
- இதில் வேறு யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்?
- அது நடக்கும் போது நீங்கள் எங்கே இருந்தீர்கள்?
- அது எவ்வளவு காலம் நடந்தது?

### நீங்கள் சுரண்டப்பட்டதாக நேர்காணல் செய்பவரிடம் சொல்வது ஏன் முக்கியமாகிறது?

நீங்கள் சுரண்டப்பட்டீர்கள் என்பதை கூடியவிரைவில் நேர்காணல் செய்பவரிடம் சொல்ல வேண்டியது முக்கியம். ஏனென்றால், நீங்கள் இங்கிலாந்தில் தஞ்சம் கோருவது ஏன் முக்கியமாகிறது என்பதை விளக்க இந்தத் தகவல் உங்களுக்கு உதவக்கூடும்.

நீங்கள் அனுபவித்த சுரண்டல் ஒரு வகையான "கடத்தல்" என்று தகுதியறிதல் நேர்காணல் செய்பவர் கருதினால், அவர் உங்களை **தேசிய பரிந்துரை பொறிமுறை**க்கு பரிந்துரைப்பார். இந்தத் தாளின் மறுபக்கத்தில் தேசிய பரிந்துரை பொறிமுறையைப் பற்றி நீங்கள் மேலும் படிக்கலாம்.

### நான் சுரண்டப்பட்டேன் என்று நேர்காணல் செய்பவரிடம் சொன்னால் என்னை இன்னும் தடுப்புக்காவலில் வைக்க முடியுமா?

**நீங்கள் சுரண்டப்பட்டதாக நேர்காணல் செய்பவரிடம் சொன்னாலும் கூட நீங்கள் தடுப்புக்காவலில் வைக்கப்படலாம்.**

நீங்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தால், நீங்கள் சுரண்டப்பட்டதாக தடுப்புக்காவல் மையத்தில் உள்ளவர்களிடம் கூறுவது மிகவும் முக்கியம். கூடியவிரைவில் ஒரு வழக்கறிஞரிடம் பேசவும் நீங்கள் முயற்சிக்க வேண்டும். ஏனென்றால், உங்கள் சுரண்டல் அனுபவம் உங்களை குறிப்பாக பாதிப்புக்கு உள்ளாக்கியிருக்கலாம்.

# 5 கடத்தல் மற்றும் சுரண்டல்
## தேசிய பரிந்துரை பொறிமுறை

UK

தேசிய பரிந்துரை பொறிமுறை (என்ஆர்எம்) செயல்முறை மூலம் பாதுகாப்பு கோருவது என்பது தஞ்சம் கோருவதன் மூலம் இங்கிலாந்தில் குடியேற்ற அந்தஸ்தைப் பெறுவதற்கான ஒரு தனி வழி ஆகும்.
நவீன அடிமைத்தனம் அல்லது ஆட்கடத்தலை அனுபவித்த பலருக்கு ஒரே நேரத்தில் என்ஆர்எம் விண்ணப்பமும் புகலிடக் கோரிக்கையும் இருக்கலாம் - ஆனால் அவை ஒரே விஷயம் அல்ல.

### தேசிய பரிந்துரை பொறிமுறை என்றால் என்ன?

தேசிய பரிந்துரை பொறிமுறை (அல்லது சுருக்கமாக என்ஆர்எம்) என்பது ஆட்கடத்தலுக்கு ஆளான மக்களுக்கு உதவக்கூடிய ஒரு கருவியாகும்.
பின்வரும் சூழல்களில் நீங்கள் **கடத்தப்பட்டதாகக்** கருதப்படும்

- ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்ல ஒருவர் உங்களுக்கு உதவியுள்ளார் அல்லது உங்களை கட்டாயப்படுத்தியுள்ளார்
- இந்த நேரத்தில், அந்த நபர் உங்களை கட்டுப்படுத்தினார், உதாரணமாக அவர் சொல்வதை நீங்கள் செய்யாவிட்டால் அவர் உங்களை காயப்படுத்துவார் என்று சொல்வதன் மூலம்
- உங்களை கட்டுப்படுத்தும் நபர் உங்களை சுரண்டுகிறார் அல்லது சுரண்ட விரும்புகிறார்.

### என்ஆர்எம்-க்கான பரிந்துரையை நான் எப்படி பெறுவது?

என்ஆர்எம்-க்கான பரிந்துரையை நீங்களாகவே செய்து கொள்ள முடியாது. 'முதல் பதிலளிப்பவர்' என அழைக்கப்படும் ஒருவர் தான் இதைச் செய்ய வேண்டும். இது காவல்துறை, உள்ளூர் அரசாங்கம் அல்லது சால்வேஷன் ஆர்மி எனப்படும் தொண்டு நிறுவனமாக இருக்கலாம்.

தகுதியறியும் நேர்காணல் செய்பவரிடம் நீங்கள் சுரண்டப்பட்டதாகச் சொன்னால், அவர் அதை முதல் பதிலளிப்பவரிடம் சொல்லி என்ஆர்எம்-க்கு பரிந்துரை செய்யும்படி முதல் பதிலளிப்பவரைக் கேட்க வேண்டும்.
**தகுதியறியும் நேர்காணல் செய்பவர் உங்களை என்ஆர்எம்-க்கு பரிந்துரை செய்யவில்லை என்றால், நீங்கள் உங்கள் வழக்குப்பணியாளரிடம் கூடியவிரைவில் தெரிவித்து,** முதல் பதிலளிப்பவரைத் தொடர்புகொள்ளும்படி அவரிடம் கேட்க வேண்டும்.

### எனது என்ஆர்எம் வழக்கும் எனது புகலிட வழக்கும் ஒன்றா?

உங்கள் புகலிடக் கோரிக்கையும் உங்கள் என்ஆர்எம் வழக்கும் வேறுபட்டவை. அதாவது உங்கள் என்ஆர்எம் வழக்கு வெற்றியடைந்தால் தானாகவே உங்களுக்கு புகலிடம் கிடைத்துவிடும் என்று அர்த்தம் அல்ல.
இருப்பினும், உங்கள் புகலிடக் கோரிக்கையை ஆதரிப்பதற்கு ஒரு நேர்மறை என்ஆர்எம் வழக்கை ஆதாரமாகப் பயன்படுத்தலாம், குறிப்பாக நீங்கள் உங்கள் நாட்டை விட்டு வெளியேறி இங்கிலாந்துக்கு வந்ததற்கு உங்கள் சுரண்டல் அனுபவம் ஒரு காரணம் எனும் பட்சத்தில்.

### என்ஆர்எம் செயல்முறை எப்படி இருக்கும்?




CHANNEL INFO PROJECT

Refugee Legal Support